உணவுப் பொருள் வழங்கல் துறை அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம்!

புதிய குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கிட நடவடிக்கை!

அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவுறுத்தல்!

சென்னை, ஜூலை 27-

சென்னை, தலைமைச் செயலகத்தில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறைத் தலைமை அலுவலர்களுடன் துறைச் செயல்பாடுகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறையின் கடந்த மூன்று ஆண்டுகளின் சட்டமன்ற அறிவிப்புகளில் முழுமையாக நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் போக நிறைவேற்றப்பட வேண்டிய அறிவிப்புகளின் தற்போதைய நிலை, 2024-25 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்புகள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், துறைப் பணியாளர்களின் பதவி உயர்வு, காலி பணியிடங்களை நிரப்புதல், பயிற்சி, ஒழுங்கு நடவடிக்கைகள், மேல் முறையீடுகள், நீதிமன்ற வழக்கு விவரங்களையும், சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றின் கடந்த மூன்று மாதங்களுக்கான நகர்வு மற்றும் நுகர்வினை ஆய்வு செய்தார். கே.எம்.எஸ் 2023-2024 -ஆம் ஆண்டில் இதுவரையில் 32.47 இலட்சம் மெ.டன். நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதற்கு பாராட்டுக்கள் தெரிவித்து, நெல் கொள்முதலில் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமலும், அனைத்து விவசாயிகளுக்கும் உடனுக்குடன் கொள்முதலுக்கான தொகையினை விடுவிக்க வேண்டுமெனவும், கழக நவீன அரிசி அரவை ஆலைகளின் அரவைத் திறனை அதிகப்படுத்திட வேண்டுமெனவும், ஒன்றிய அரசிடமிருந்து பல்வேறு இனங்களில் பெறப்பட வேண்டிய மானியத் தொகையினை உடனடியாக பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அமுதம் அங்காடிகளை நவீனப்படுத்தி விற்பனையை அதிகப்படுத்திடவும், வட்ட செயல்முறைக் கிடங்குகளில் பழுது பார்க்க வேண்டியிருப்பின், உடனடியாக பழுது பார்த்து கிடங்கின் முழுக் கொள்ளளவினையும் பயன்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு தேவையான அரிசி, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் தரத்தினை உறுதி செய்து எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் உடனுக்குடன் நகர்வு செய்திட அறிவுறுத்தினார்.

தற்போது பொதுமக்களிடம் நுகர்வு பயன்பாடு பெருமளவில் பெருகிவருவதால் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்ந்து வழங்குவதனை உறுதி செய்ய வேண்டுமெனவும் அவ்வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டுமெனவும், முன்மாதிரி அங்காடிகளாக நியாய விலைக் கடைகளை மாற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை ஆய்வு செய்தும், ஒவ்வொரு பகுதியிலும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவைப்படும் இடங்களில் புதியதாக பகுதி மற்றும் முழு நேர நியாய விலை அங்காடிகளை திறக்க வேண்டுமெனவும், தகுதி வாய்ந்த நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அனைத்துப் பொருட்களும் நியாய விலை அங்காடிகளில் இருப்பதை உறுதி செய்து ஒரே நேரத்தில் அனைத்துப் பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கிடைத்திடும் வகையில் ஒதுக்கீடு செய்திடவும் அறிவுறுத்தினார்.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் மாநில எல்லைப் பகுதியிலுள்ள பிற மாநிலங்களின் அலுவலர்களுடன் அடிக்கடி கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தி, அரிசிக் கடத்தலை அறவே தடுத்திட வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கினார்.

சேமிப்புக் கிடங்கு நிறுவன, கிடங்குகளின் கொள்ளளவு பயன்பாட்டினை அதிகரித்து புதிய கிடங்குகள் மற்றும் குளிர்சாதன வசதியுள்ள கிடங்குகள் கட்டிட நடவடிக்கை மேற்கொண்டு வருவாயினை அதிகப்படுத்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், அமைச்சர் அவர்களின் அறிவுரைகளை பின்பற்றி, பொது விநியோகத் திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட அனைத்து அலுவலர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் எஸ். பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திருமதி. ப.காயத்ரி கிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது மேலாளர் (சந்தை) ரெ. சதிஷ், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுக் காவல்துறைத் தலைவர் க.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று (26.07.2024) தலைமைச் செயலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை தொடர்பாக தலைமை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் எஸ். பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திருமதி. ப. காயத்ரி கிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது மேலாளர் (சந்தை) ரெ.சதிஷ், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல் துறைத் தலைவர் க.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 2 ஆண்டுகளில் அறிவித்த

100 அறிவிப்புகளில் 135 பணிகளும் டிசம்பர் 25-க்குள் முடிக்கப்படும்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூலை 27-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.7.2024) சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகந்நாதன் தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையத்தினையும் (Kolathur Dialysis Centre), அகரம், ஜெகந்நாதன் தெருவில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பன்னோக்கு மையத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் புதிதாக அமையவுள்ள பகிர்ந்த பணியிட மையத்தினையும் (Co-working Space), கொளத்தூர், ரெட்ஹில்ஸ் ரோட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன சந்தையையும் (Kolathur Modern Market) மற்றும் கொளத்தூர், ரெட்ஹில்ஸ் ரோட்டில் அமையவுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் சி.எம்.டி.ஏ., சார்பில் பகிர்ந்த பணியிட மையம் என ஒருங்கிணைந்த மக்கள் சேவை மையத்திற்கான இடத்தினையும் (Kolathur Citizen Service Centre) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர்-ஆக என்ற வாய்ப்பை வழங்கிய கொளத்தூர் சட்டமன்ற தொகுதி மக்கள் என்ற வகையில் அனைத்து தொகுதிகளுக்கும் தமிழக முதல்வர் என்றாலும் கொளத்தூர் தொகுதியை பொறுத்தளவில், எங்கள் வீட்டு தொகுதி என்ற வகையிலே இந்த தொகையின் மீது அதிக அக்கறை கொண்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். அந்த வகையில் இன்றைக்கு கொளத்தூர் பகுதி மக்கள் வருவாய் சம்பந்தப்பட்ட இனங்களுக்கு அணுக வேண்டும் என்றால், முதியோர் ஓய்வூதிய தொகை, அதேபோல் பொங்கலுக்கு தருகின்ற சிறப்பு பரிசுகள் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ் போன்றவர்களை பெறுவதற்கு அதிக தூரம் பயணிக்கின்ற நிலை இருந்ததால் தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று கொளத்தூர் என்று தனியாக ஒரு வட்டாட்சியர் அலுவலகம் உருவாவதற்கு அரசாணை பிறப்பித்திருக்கின்ற முதல்வர் நம் தமிழக முதல்வர். இந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் என்பதை பெருமையோடு சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

வீடுகள் விற்பது வாங்குவது போன்ற பதிவுகளை செய்வதற்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஒரு கட்டடத்தில் போதிய இடவசதி இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கு சப்-ரிஜிஸ்டர் ஆபீஸ் என்கின்ற அலுவலகத்திற்கு புதிதாக ஒரு கட்டடத்தை கட்டுவதற்கும் தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில் இந்த பேப்பர் மில்ஸ் சாலையில் அமைந்திருக்கின்ற ஒரு ஏக்கருக்கும் அதிகமான இந்த இடம் சமூக விரோத கும்பல்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. தமிழக முதல்வர் அவர்கள் மீட்டு அந்த இடத்திலே வருவாய்த்துறைக்குண்டான வட்டாட்சியர் அலுவலகமும் அதே போல் சப்-ரிஜிஸ்டர் அலுவலகமும் மற்றும் வணிக வளாகங்களும் கட்டுவதற்கு எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்களும், மேயர் திருமதி. ஆர். பிரியா ராஜன் அவர்களும், பெருநகர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் அவர்களும், உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா அவர்களும், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே அவர்களும், இந்த தொகுதியின் கண்காணிப்பு அலுவலர் அன்பிற்கினிய கணேசன் அவர்களும் அதேபோல் பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அவர்களும் மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார் அவர்களும் மற்றும் மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார் ஆகியோரோடு இப்போது நாங்கள் இந்த இடத்தினை மேற்பார்வையிட்டோம். இந்த அனைத்து பணிகளையும் டிசம்பர் மாதம் 2025-க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான முனைப்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இருக்கின்றோம்.

ஏழை எளிய மக்கள் தங்களுடைய படிப்பினை தொடர்வதற்கு வீட்டில் போதிய வசதி இல்லை என்ற காரணத்தினால் அவர்கள் தனியாக படிப்பதற்கும் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் அதேபோல் மாணவர்களுக்கும், பணி புரிகின்ற இளைஞர்களுக்கு தனியாக பணி செய்வதற்குண்டான இடங்களையும் உருவாக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார். அதற்கேற்ப அகரம், ஜெகந்நாதன் தெருவில் அமையபெற்றிருக்கின்ற சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியோடு சென்னை பெருநகரத்தின் மூலநிதியோடு கட்டப்பட்டிருக்கின்ற அந்தக் கட்டிடத்தை ஆய்வு செய்தோம். அடுத்த மாதம் 25 ஆம் தேதி முதலமைச்சர் அவர்களின் பொற்காரங்களால் அந்த கட்டிடத்தை திறந்து வைப்பதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். அந்த வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற 4 புதிய மாநகராட்சி பள்ளிக்கூடங்களையும், அதேபோல் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற டயாலிசிஸ் சென்டர், 2 பேருந்து முனையங்கள், அதேபோல் வணிக வளாகங்கள் ஆகியவற்றையும் இன்றைக்கு கள ஆய்வு செய்தோம். இந்த பணிகள் அனைத்தும் 2025 ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகின்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 2023-24, 2024-25 ஆகிய 2 இரண்டு ஆண்டுகளில் சுமார் 100 அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கின்றோம். அந்த 100 அறிவிப்புகளில் 135 பணிகள் அடங்கியிருக்கின்றன, அந்த 135 பணிகளையும் டிசம்பர் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான முயற்சிகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தொடர்ந்து செயல்பட்டு கொண்டிருக்கின்றது.

சென்னை பெருநகரத்தின் உடைய வட சென்னை வளர்ச்சி திட்டத்தில் 4,378 கோடி ரூபாய் அளவிற்கு தமிழக முதல்வர் அவர்கள் 218 பணிகளை அறிவித்திருக்கின்றார் அதில் 118 பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன மீதம் இருக்கின்ற நூறு பணிகளை தொடர்ந்து அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து அந்த பணிகளையும் மேற்கொண்டு இந்த எல்லா பணிகளையும் டிசம்பர் 2025க்குள் முடிக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்கள் நேரடி கண்காணிப்பில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தை வைத்து, தொடர்ந்து பணிகளை முடக்கிக் கொண்டிருக்கின்றார். அந்த வகையில் அந்த பணிகளும் டிசம்பர் 2025க்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களும் ஒன்றிணைந்து அந்த பணிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். இந்த பணிகள் அனைத்தும் நிறைவடைகின்ற பொழுது நிச்சயமாக எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி வருகின்றது அதில் குறிப்பாக இன்றைய முதல்வர் கையில் எப்பொழுதெல்லாம் அதிகாரம் வருகின்றதோ, அப்போதெல்லாம் மாநகரத்தின் உடைய தேவைகள் எல்லாம் பூர்த்தி செய்பவராக நம் முதல்வர் அவர்கள் இருக்கின்றார். அந்த வகையில் இந்த பணிகள் நிறைவு பெறுகின்ற பொழுது நிச்சயமாக சென்னை பெருநகரத்தில் வசிக்கின்ற மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையும். இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியம், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

ஆஸ்திரேலியா - சிட்னி மாகாணத்தில்

வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடல்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்!

சிட்னி, ஜூலை 27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஆஸ்திரேலியா நாட்டிற்கு அரசுமுறைப்பயணம் மேற்கொண்டுள்ள வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று 26.07.2024 சிட்னி மாகாணத்தில் உள்ள வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகத்தில் உள்ள இன்னவேஷன் சென்டரை பார்வையிட்டு அதன் அதிகாரிகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது குறைந்து வரும் வேளாண்மை தொழிலாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தமிழக வேளாண்மையை ரோபோட்டிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் நவீனப்படுத்துதல் குறித்தும் குறைந்த செலவில் பசுமைக்குடில்களை அமைக்க ஆஸ்திரேலியாவின் உயரிய தொழில்நுட்பங்களை தமிழகத்தில் அறிமுகப்படுத்துவதற்கான சத்தியக்கூறுகள் குறித்தும் ஆலோசித்தார்.

மேலும், தமிழகத்தில் நீர் ஆதாரங்களை உழவர்களின் பங்களிப்புடன் மேம்படுத்துவதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை ஆஸ்திரேலியா - இந்தியா நீர் ஆராய்ச்சி மையத்தின் மூலமாக முன்னெடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேற்கண்ட கலந்துரையாடலின் போது தமிழக வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் செல்வி.அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக துணை வேந்தர் முனைவர் வெ.கீதா லட்சுமி மற்றும் வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழக அதிகாரிகள் முனைவர் டான் ரைட், முனைவர் இயன் ஆண்டர்சன் மற்றும் நிஷா ராகேஷ் உடன் இருந்தனர்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 திட்டத்தின் 140ஆவது தொகுதியாக அவினாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியாயிபாளையம் பகுதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் அரசு மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர் ப.தனபால் அதுபோது உடனிருந்தார். ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து, மாணவச் செல்வங்களிடம் கலந்துரையாடினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.7.2024) சென்னை, கொளத்தூர், ரெட்ஹில்ஸ் ரோட்டில் அமையவுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் சி.எம்.டி.ஏ. சார்பில் பகிர்ந்த பணியிட மையம் என ஒருங்கிணைந்த மக்கள் சேவை மையத்திற்கான இடத்தினை (Kolathur Citizen Service Centre) இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியம், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.